இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

திங்கள்கிழமை 23.02.2026

# பா.ஜ.க.வின் கலவர அரசியல்!

**‘பா.ஜ.க.வுக்கு வளர்ச்சி அரசியல் தெரியாது, கலவர அரசியல்தான் தெரியும்’ என்று மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சொன்னார்கள். மைக்கேல் பட்டி மாணவி தற்கொலை வழக்கு, பா.ஜ.க.வின் கலவர அரசியலை வெளிப்படுத்தி உள்ளது.**

அரியலூர் மாவட்டம் வடுகர்பாளையத்தைச் சேர்ந்த 17 வயது மாணவி லாவண்யா, தஞ்சாவூர் மாவட்டம் மைக்கேல் பட்டியில் அமைந்துள்ள பள்ளி ஒன்றில் 12ஆம் வகுப்பு படித்து வந்தார். கடந்த 2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் விஷம் அருந்தி உயிரிழந்தார்.

கட்டாய மதமாற்றத்தால் மாணவி லாவண்யா உயிரிழந்ததாக பா.ஜ.க. மற்றும் வி.எச்.பி. அமைப்பினர் குற்றஞ்சாட்டினர். அப்போது பா.ஜ.க. தலைவராக இருந்த அண்ணாமலை, சி.பி.ஐ. விசாரித்தால்தான் உண்மை நிலை வெளியில் வரும் என்று கொந்தளித்தார். மதமாற்ற அழுத்தம் காரணமாகவே அந்த மாணவி தற்கொலை செய்து கொண்டதாக ஆதாரமற்ற அவதூறு கருத்துக்களை கூறி பிரச்சினையை திசை திருப்பினார் அண்ணாமலை.

அகில இந்திய பா.ஜ.க. தலைமை நால்வர் விசாரணைக் குழுவையே அனுப்பி விசாரணை நாடகத்தை நடத்தியது. நடிகை விஜயசாந்தி, சதியா ரே, சித்ரா தைவா, கீதா விவேகானந்தா ஆகியோர் இதில் இடம்பெற்று இருந்தனர். பா.ஜ.க.வின் அகில இந்திய தலைமை வெளியிட்ட அறிக்கையில், ‘துன்புறுத்தல் மற்றும் கட்டாய மத மாற்றத்தின் அடிப்படையில் தான் இந்த தற்கொலை நடந்துள்ளது’ என்று தீர்ப்பே எழுதி விட்டார்கள்.

பள்ளி நிர்வாகமும், விடுதி காப்பாளர்களும் கட்டாய மதமாற்றத்தில் ஈடுபட்டதாகவும், இதனாலேயே விஷம் குடித்ததாகவும் பா.ஜ.க. குற்றஞ்சாட்டியது. இதனை மாவட்ட காவல்துறை முற்றிலுமாக மறுத்தது.

மருத்துவமனையில் இருந்த லாவண்யாவிடம் அரியலூர் மாவட்ட விசுவ இந்து பரிசத்தைச் சேர்ந்த ஒருவர் பேசும் காணொளி ஒன்றை அப்போதைய பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை வெளியிட்டார். மத ரீதியாகவோ, மதமாற்றச் சொல்லியோ தன்னைத் துன்புறுத்தியதாக அம்மாணவி சொல்லவில்லை.

மாஜிஸ்ட்ரேட் முன்பு லாவண்யா வாக்குமூலம் அளித்த போது, விடுதி காப்பாளர், விடுதி தொடர்பான பல பணிகளை தொடர்ந்து தனக்கு ஒதுக்கியதால் ஏற்பட்ட மன அழுத்தம் காரணமாக தன்னால் ஒழுங்காக படிக்க முடியவில்லை என்றுதான் சொல்லி இருந்தார்.

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பள்ளிகளிலும் இதுபோன்ற மதமாற்றம் நடைபெறுகிறது என்கிற அளவுக்கு பீதி கிளப்பியது பா.ஜ.க. அக்கட்சியின் சமூக வலைத்தள பக்கத்தில் ‘லாவண்யாவுக்கு நீதி வேண்டும்’ என்ற ஹேஸ்டேக்கை பரப்பியது. தேசிய குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் (NCPCR) கட்டாய மதமாற்றம் நடந்திருக்கிறது என்று கூறி விசாரணைக்கு வந்தது.

மதமாற்ற தற்கொலை என்று முத்திரை குத்தி, தமிழ்நாட்டின் மதநல்லிணக்கத்திற்கும், அமைதிக்கும் அச்சுறுத்தல் ஏற்படுத்துகின்ற வகையில் இச்சம்பவம் அரசியலாக்கப்பட்டது.

இவ்வழக்கை சி.பி.சி.ஐ.டிக்கு மாற்ற வேண்டும் என மாணவியின் தந்தை முருகானந்தம் சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு தொடர்ந்தார். இதற்காகவே காத்திருந்ததைப் போல சி.பி.ஐ.க்கு இந்த வழக்கு மாற்றப்பட்டது. விவகாரம் சி.பி.ஐ.க்குப் போனது.

சி.பி.ஐ. விசாரித்து, உச்சநீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்துள்ளது. அந்த அறிக்கையில், மாணவி லாவண்யாவை மதமாற்றம் செய்ய முயற்சி நடைபெறவில்லை என சி.பி.ஐ. தெரிவித்துள்ளது. மாணவி லாவண்யா பேசிய எந்த ஒரு காணொளியிலும் எந்த நேரத்திலும் மதமாற்றம் பற்றி எதுவும் கூறவில்லை என்பது விசாரணையில் தெரிய வந்துள்ளதாக சி.பி.ஐ. அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**“பள்ளியில் சகாய மேரி என்கிற விடுதி காப்பாளர் மாணவிக்கு நிர்வாக வேலைகளை (Administratiive Work) கொடுத்து வந்ததால் அது மாணவியின் படிப்பிற்குப் பெரிய தொல்லையாக இருந்துள்ளது. அடிக்கடி மாணவியைக் கண்டித்துள்ளனர். இதனால் தனக்கு அவமானம் நேர்ந்துவிட்டதாக நினைத்து மாணவி தற்கொலை செய்து கொண்டிருக்கலாம்”** என்று சொல்லி இருக்கிறது சி.பி.ஐ. தனது விசாரணை அறிக்கையில்.

**”பள்ளியில் 677 மாணவர்கள் படிக்கின்றனர். அதில் 444 பேர் இந்து சமூகத்தைச் சேர்ந்தவர்கள். 219 பேர் கிறிஸ்தவ சமூகத்தைச் சேர்ந்தவர்கள். 14 மாணவர்கள் இஸ்லாமிய சமூகத்தைச் சேர்ந்தவர்கள். முக்கியமாகக் கிட்டத்தட்ட 2010 ஆம் ஆண்டு முதல் பள்ளியில் படித்த மாணவர்களுடைய மாற்றுச் சான்றிதழ்களை (TC) கொண்டு வரச் சொல்லி முழுவதுமாக சரிபார்த்ததில் பள்ளிப் படிப்பை முடித்து வெளியே சென்ற மாணவ மாணவிகள் யாரும் தங்களின் பெயரையோ, மாற்றுச் சான்றிதழில் மதத்தின் பெயரையோ மாற்றவில்லை என்பதை உறுதி செய்தது.மதம் மாற்றியதாக எந்த மாணவ மாணவியும் தெரிவிக்கவில்லை; கட்டாய மதமாற்றம் பள்ளியில் நடந்ததற்கான எந்த சான்றுகளும் இல்லை”** என்று சி.பி.ஐ தன்னுடைய விசாரணை அறிக்கையில் தெரிவித்துள்ளது.

மாணவி லாவண்யா இறந்த பின் அவருடைய தந்தை, சித்தி ஆகியோர் விஸ்வ இந்து பரிஷத் மற்றும் தஞ்சாவூரை சேர்ந்த சில பா.ஜ.க தலைவர்களின் நிர்பந்தத்தால் , லாவண்யாவின் உடலை பெற்றுக்கொள்ள மறுத்ததாகவும் சி.பி.ஐ. அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. வி.ஹெச்.பி நிர்வாகி முத்துவேல் மற்றும் சில பா.ஜ.க தலைவர்களின் அழுத்தம் காரணமாக, மாணவியின் பெற்றோர் சில காலம் தலைமறைவாகவே இருந்தனர் என்றும் சி.பி.ஐ. தெரிவித்துள்ளது.

பாதிக்கப்பட்ட மாணவியின் அடையாளத்தை மறைக்காமல் வீடியோ எடுத்து சமூக வலைதளங்களில் வெளியிட்ட வி.ஹெச்.பி நிர்வாகி முத்துவேல் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் சி.பி.ஐ. தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. **சி.பி.ஐ. தாக்கல் செய்துள்ள இந்த விசாரணை அறிக்கையின் மூலம், லாவண்யா மரணத்தில் பா.ஜ.க.வினரும், வி.எச்.பி. அமைப்பினரும் திட்டமிட்டு மத ரீதியாக அவதூறு பரப்பி, பதற்றத்தை ஏற்படுத்த முயற்சித்தது அம்பலமாகியுள்ளது.**

**பா.ஜ.க. தலையெடுத்தால் என்ன நடக்கும் என்பதற்கு உதாரணம் இது. ஒரு மாணவியின் தற்கொலையை தமிழ்நாட்டின் அமைதிக்கு குந்தகம் ஏற்படுத்தும் விவகாரம் ஆக்கி குளிர்காய நினைக்கும் பா.ஜ.க.வின் பசப்புவாத அரசியலுக்கு நிரந்தரமாக முற்றுப்புள்ளி வைத்தாக வேண்டும்.**



கழகத் தலைவரும் முதலமைச்சருமான மு.ஸ்டாலின் அவர்களை நேற்று (22.2.2026) முகாம் அலுவலகத்தில் 2026 சட்டமன்றத் தேர்தலையொட்டி கூட்டணிக் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திட அமைக்கப்பட்ட குழுவின் தலைவர் கழகப் பொருளாளரும், மக்களவை கழகக்குழுத் தலைவருமான டி.ஆர்.பாலு, உறுப்பினர்கள் கழக முதன்மைச் செயலாளரும், அமைச்சருமான கே.என்.நேரு, உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர்கள் – பொதுப் பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், துணைப் பொதுச் செயலாளர் – நாடாளுமன்ற உறுப்பினர் திருச்சி சிவா, அமைப்புச் செயலாளரும். நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான ஆர்.எஸ்.பாரதி ஆகியோர் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.

# தொகுதி உடன்பாடு: தி.மு.க. - இந்திய யூனியன் முஸ்லிம் லீக் பேச்சுவார்த்தை!

**சென்னை, பிப்.23 -**

**2026 ஆம் ஆண்டு சட்டப்பேரவை தேர்தலையொட்டி, கூட்டணி கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த தி.மு.க. சார்பில் குழு அமைக்கப்பட்டுள்ளது. தி.மு.க. பொருளாளர் டி.ஆர்.பாலு தலைமையிலான இந்த குழுவில், தி.மு.க. முதன்மை செயலாளர் கே.என்.நேரு, துணைப் பொதுச்செயலாளர்கள் திருச்சி சிவா, ஆ.ராசா, தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, தி.மு.க. உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர்கள் எ.வ.வேலு மற்றும் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.**

இந்நிலையில், தி.மு.க. சார்பில் அமைக்கப்பட்டுள்ள இந்த குழுவினர், தொகுதி உடன்பாடு தொடர்பாக, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியுடன் பேச்சுவார்த்தை நடத்தினர்.



2026 சட்டமன்ற பொதுத் தேர்தலையொட்டி கூட்டணிக் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திட அமைக்கப்பட்ட குழுத் தலைவர் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி தலைமையிலான குழுவினர் நேற்று, அண்ணா அறிவாலயத்தில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசியத் தலைவர் பேராசிரியர் காதர் மொகிதீன் தலைமையிலான அக்கட்சி நிர்வாகிகளுடன் தொகுதி உடன்பாடு குறித்து பேச்சுவார்த்தை நடத்தினர்.

சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற இந்த பேச்சுவார்த்தையில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சித்தலைவர் காதர் மொகிதீன் உள்ளிட்ட அக்கட்சியின் நிர்வாகிகள் பங்கேற்றனர்.

இதையடுத்து, செய்தியாளர்களிடம் பேசிய காதர் மொகிதீன், தொகுதி உடன்பாடு குறித்து தி.மு.க.வுடன் நடத்திய பேச்சுவார்த்தை சுமூகமாக நடைபெற்றதாக தெரிவித்தார். முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான ஐந்து ஆண்டுகால திராவிட மாடல் ஆட்சி மிகச் சிறப்பாக இருந்ததாகவும் அவர் கூறினார்.

## வடபழஞ்சி எல்காட் பூங்காவில்

# ரூ.150 கோடியில் உலகளாவிய சிறப்பு பொறியியல் மையம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**மதுரை, பிப்.23-**

**பினாகிள் இன்ஃபோடெக் (Pinnacle Infotech) நிறுவனத்தின் விரிவுப்படுத்தப் பட்ட புதிய உலகளாவிய சிறப்புப் பொறியியல் மையக் கட்டடத்தை திறந்து வைத்து மற்றும் பணியாளர்கள் குடியிருப்புக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.**

மதுரை மாவட்டம், வடபழஞ்சி எல்காட் தகவல் தொழில்நுட்ப பூங்காவில் பினாகிள் இன்ஃபோடெக் (Pinnacle Infotech) நிறுவனம் உலகளாவிய சிறப்புப் பொறியியல் மையத்தை (Global Engineering Centre of Excellence) நிறுவியுள்ளது. இந்த மையம் பினாக்கிள் டிஜிட்டல் பொறியியல், கட்டுமானம் மற்றும் டிஜிட்டல் இரட்டை தீர்வுகளுக்கான முதன்மை உலகளாவிய விநியோக மையமாக செயல்படுகிறது. இந்நிறுவனம் 38 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. இந்த மையம் மே 2023 அன்று 1800 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் தொடங்கப் பட்டது.

தற்போது பினாகிள் இன்ஃபோடெக் நிறுவனத்தின் விரிவுப்படுத்தப் பட்ட புதிய உலகளாவிய சிறப்புப் பொறியியல் மையத்திற்கான புதிய கட்டடம் தரை மற்றும் மூன்று தளங்களுடன் 1,60,000 சதுர அடி பரப்பளவில் 150 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டு முதலமைச்சர் அவர்களால் இன்றைய தினம் திறந்து வைக்கப் பட்டது. இந்த விரிவுப்படுத்தப்பட்ட மையத்தின் மூலம் சுமார் 2,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைப்பதோடு, தென் மாவட்டங்களைச் சேர்ந்த இளைஞர்களுக்கு உயர்தரத் தொழில்நுட்ப வேலைவாய்ப்புகளை உருவாக்கும் முக்கிய முயற்சியாக இது அமைகிறது.

அதனைத் தொடர்ந்து, 14.30 ஏக்கர் பரப்பளவில் சுற்றுச்சூழலுக்கு உகந்த வகையில் சுமார் 1,200 பணியாளர்கள் தங்குவதற்கான வசதிகளுடன் அமைக்கப்படவுள்ள ஊழியர் குடியிருப்புக்கு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

**புரிந்துணர்வு ஒப்பந்தம்**

முதலமைச்சர் அவர்களின் முன்னிலையில், **எல்காட்** மற்றும் **ஹெச்சி எல்டெக்** நிறுவனங்களுக்கும் இடையே மதுரை, இலந்தைக்குளம் **எல்காட்** சிறப்பு பொருளாதார மண்டலத்தில் 2.41 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் மூலம் 150 கோடி ரூபாய் முதலீட்டில் **ஹெச்சிஎல்டெக்** நிறுவனம் 1,000 புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்க உள்ளது. இது தென் தமிழ்நாட்டில் தகவல் தொழில்நுட்பத் துறையின் வளர்ச்சியை மேலும் வலுப் படுத்தும்.

இந்நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி, பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறை முகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் கோ.தளபதி, அ.வெங்கடேசன், மு.பூமிநாதன், காதர்பாட்சா முத்துராமலிங்கம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை முதன்மைச் செயலாளர் பிரஜேந்திர நவநீத், எல்காட் மேலாண்மை இயக்குநர் டாக்டர் கா.ப..கார்த்திகேயன், நகராட்சி நிர்வாகத் துறை இயக்குநர் பி.மதுசூதன் ரெட்டி, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன் குமார், மதுரை மாநகராட்சி ஆணையர் திருமதி சித்ரா விஜயன், மதுரை மாநகராட்சி துணை மேயர் நாகராஜன், ஸ்ரீ மீனாட்சி அரசினர் மகளிர் கலைக் கல்லூரி முதல்வர் முனைவர் வானதி, கல்லூரி கல்வி இணை இயக்குநர் (மதுரை மண்டலம்) முனைவர் வெ.கலைச்செல்வி, ICT அகாடமி முதன்மை செயல் அலுவலர் வி.ஸ்ரீகாந்த், பினாகிள் நிறுவனத்தின் முதன்மை செயல் அலுவலர் பிமல் பட்வாரி, இயக்குநர் திருமதி ஸ்பனா பட்வாரி,உலகளாவிய தலைவர் டாக்டர் உமா மகேஸ்வரன், HP இந்தியா சேல்ஸ் நிறுவனத்தின் தெற்கு மண்டல விற்பனைத் தலைவர் ஜி.சந்திரமௌலி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



கோவை மாவட்டத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்க நேற்று வருகை தந்த துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை கோவை விமான நிலையத்தில் முன்னாள் ஒன்றிய அமைச்சரும் கழக துணைப்பொதுச்செயலாளருமான ஆ.இராசா எம்.பி. சால்வை அணிவித்து வரவேற்றார்.